Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம் ( 1889 ) ஆவணி மாதம் 28 ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்.- சூ௩.] யாழ்ப்பாணம்:- கரவருஷ கார்த்திகைமீ எ உ வெள்ளிக்கிழமை (23 நவம்பர் 1951) [இல். - சூ௩.]

## "பிரதமரை இட்டுவாருங்கள் இல்லையேற் குதித்து உயிர் விடுவேன்"

சென்ற ஞாயிற்றுக்கிழமை அரையில் ஒரு துணிமாத்திரம் கட்டியபடி 20 வயசு வரையுள்ள ஒரு வாலிபன் கொழும்புத் துறைமுகத்துக்கணித்தாகவுள்ள "கிறண்ட் ஒறியன்ரல் ஹோட்டல்" என்னும் பெரிய விடுதிச்சாலைக் கட்டடத்தின் உன்னதமான தூபியின் உச்சியில் ஒருவாறு ஏறி நின்றுகொண்டு "பிரதமர் சேனநாயகவை என் முன் கூட்டிவந்து காட்டுங்கள், இல்லையேல் இதில் நின்று குதித்து என்னுயிர் மாய்ப்பேன்" என்று சத்தமிடத் தலைப்பட்டான்; அவன் இட்ட ஓலத்தைக் கேட்டு அயலிலுள்ள சனங்கள் வழிப்போக்கர் பொலிசர் எல்லாரும் வந்து கூடினர்; பொலிசரும் மற்றுமுள்ளோரும் அவனை அந்த அபாயமான நிலையினின்று இறங்கச் செய்தற்குத் தங்களால் ஆனமட்டும் முயன்றனர்; இரண்டு மணி நேரம் இப்படியே சத்தமிட்டுக்கொண்ட அவ்வாலிபனைப் பொலிசர் நெருப்பவிக்கும் யந்திரத்தைக் கொண்டு வந்து நிறுத்தி அதன்கணுள்ள ஏணி மூலமாக இறங்கச்செய்து பொலிஸ் தானத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனராம்.

## குழந்தையைக் காக்கத் தன்னுயிர்விட்ட பூனை

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த உத்தரபாரா என்னுமிடத்தில் வசிக்கும் ஒரு குடும்பத்திற்குரிய மூன்று வயசு ஆண் குழந்தை தங்கள் வீட்டுப் பூனையோடு விளையாடிக்கொண்டிருக்கும்போது ஒரு நாகபாம்பு படமெடுத்து இரைந்து கொண்டு குழந்தையைத் தீண்ட வருதலும், பூனை இடையிற் புகுந்து பாம்பைத் தடுக்க, பூனைக்கும் பாம்பிற்குஞ் சண்டையுண்டாயது; குழந்தை ஏங்கியபடி இருந்தது; பூனை பாம்பென்னுமிவற்றின் அரவத்தைக் கேட்டவளாகிய குழந்தையின் தாய் ஓடிவந்து பார்த்தபோது ஆபத்தானநிலைமையைக் கண்டு குழந்தையைத் தூக்கிச் சென்று தூரத்தில் நின்று சத்தமிட்டாள். இதற்கிடையில் அயலார் ஓடிவந்து பாம்பை யடித்துக் கொன்றனர்: கடியுண்ட பூனையும் உடனே மாண்டுபோனதாம்.

## "பஸ்" ஓடும்போது இறங்க முயன்றமையால் மாண்டாள்

கம்பகாவைச் சேர்ந்த மடவத்தை யென்னுமிடத்தில் வசித்த செவஸ்தினு ஸில்வா என்னுமொரு 75 வயசுக் கிழவி பஸ் பிரயாணஞ் செய்யும்போது, குறித்த பஸ் ஓடி நிற்பதற்கிடையில் இறங்க முயன்று கால் தவறித் தெருவில் வீழ்ந்தபோது அந்தப் பஸ்ஸின் சில்லில் தன்னொரு கால் அகப்பட்டு நெரிந்து ஊறடைந்தமையினால் மாண்டாள்.

உ

## தோத்திரம்

தனித்திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே.

மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையினின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய வீசன் றமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள்.

# நாவலர்காட்டிய நன்னெறி

— செ. கோவிந்தசாமி —

கிறீஸ்தவர் சிவமதத்தைக் குன்றச் செய்த காலத்தில் சைவத் தாயானவள் செய்த அருந்தவப் பேறாய் 1822 ல் நாவலர் பெருமான் உதித்தார். உரியகாலத்தில் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று 22 வயசு வரையிற் சகல கலைகளையும் கற்றுத் தெளிந்தார். இவரது கல்வித் திறமையையும் நல்லொழுக்கத்தையும் கேள்விப்பட்ட பீற்றர் பார்சிவல் என்பவர் பாடசாலைக்கு ஆசிரியராக நியமனம் செய்தார். பார்சிவல், நாவலர் பெருமானை ஆசிரியராக நியமனஞ் செய்த ஞான்றே அவருக்குச் சைவ அபிமானமும் ஏற்பட்டது. இந்த அபிமானத்தின் முதிர்வினாலே படிப்பித்தலையும் விட்டுத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் சைவத்துக்கும் தமிழுக்கும் அர்ப்பணம் செய்ய முற்பட்டார். யாழ்ப்பாணத்தையும் தென்னிந்தியாவையும் தலைநிமிர்த்து பார்த்தார். பொதுவாகக் கூறுமிடத்து இக்காலத்திலே தமிழ் நாட்டில் கடவுள் நம்பிக்கை இல்லாமை, மாயாவாதம், புரட்டுவாதம், நீதி நெறியின்மை, வருணாச்சிரம நெறியின்மை முதலாய தீமைகள் மலிந்திருப்பன போல், நாவலர் காலத்திலும் மலிந்திருந்தன. இதனை நாவலர் எழுதி வெளியிட்ட யாழ்ப்பாணச் சமய நிலை, பிரபந்தத் திரட்டு முதலிய நூல்களினால் அறியக் கிடக்கிறது.

வேதாகமங்களை நாவலர் பெருமான் பதிவாக்காகக்கொண்டு வாழ்க்கை நடத்தியிருக்கிறார். இப்பதிவாக்கைப் பேணி நடப்பவர்களே சைவர்களாவர். அல்லாதார் புறச்சமயவாதிகளாவர். ஆகமத்தின் உண்மை உணர்த்தும் பொருட்டு நாவலர் பெருமான் தாம் எழுதிய சைவவினாவிடைகளிலும் வேத சிவாகமவியலென ஓர் இயலை வகுத்து எங்களுக்கு நல்வழியைக் காட்டியிருக்கிறார். அதுவுமல்லாமல் ஒவ்வொரு வருணத்தினரும் தத்தம வருணாச்சிரம நெறிக்குத தக்கபடி ஆலயவழிபாடு செய்யு முறைகளையும் எங்களுக்கு நன்கு விளக்கி யிருக்கிறார், இவற்றையெல்லாம் நாம் கடைப்பிடித்தொழுகாது புதிய கொள்கைகளில் ஈடுபடுவோமானால் நரகடைவது திண்ணம்.

இறைவன் சந்நிதானங்களிலே ஓதும்படி ஆன்றோர்கள் பன்னிரு திருமுறையை வகுத்திருக்கிறார்கள். நாவலர் பெருமானும் திருமுறைகளையே ஓதும்படி சைவமக்களுக்குக் கற்பித்திருக்கிறார். தாமும் சிதம்பரத்தில் நடராசப் பெருமான்மீது திருமுறைப் பாக்களைப் பக்திச்சுவையோடு ஓதி ஏனையோர்க்கு வழிகாட்டியுமிருக்க, இப்போது நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்திலே திருமுறை ஓதக்கப்பட்டு ஒரு சமூகப் பண்பாடான கூட்டு வழிபாடொன்றை இந்தியாவிலிருந்து கொழும்புக்குக் கொண்டு வந்து நவீனமருட் பாக்களைப் பாடி யாழ்ப்பாணத்திலும்புகுத்தத்தலைப்பட்டுள்ளனர். இதுவும் ஒரு விபரீதச் செய்கையாகும். சைவத்தின் உண்மையையுணராத சில சைவர் இச்செய்கையிலும் பங்குபற்றுகின்றனர், கூட்டுப் பிரார்த்தனை சில சந்தர்ப்பத்தில் தீய செயல்களையும் புகுத்தி விடுகிறது. ஆகவே இச்செயலை விட்டு நாவலர் காட்டிய திருமுறைப் பாக்களையே ஆலயங்களிலும் பசனை செய்யுமிடங்களிலும் படித்துக் கடைத்தேறுவோமாக.

இன்னும் நாவலர் பெருமான் எங்களுக்கு நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித் தொழுகுமாறு வழிகாட்டியிருக்கிறார். பிரமச்சரிய விரதத்தை அநுட்டித்துத் துறவு வாழ்க்கை நடாத்திச் சைவத்தை வளர்த்த பெருமையும் தமிழ்க்கல்வியை விருத்தி செய்த பெருமையும் நாவலருக்கே சிறப்பாக அமைந்ததாகும்.

## "என் புத்தி கேளாவிட்டால் தெருவில் அலைந்து திரிவாய்"

கொழும்பைச் சேர்ந்த கல்கிஸையில் வசிக்கும் லைலற் செனிவரத்தின என்னும் கன்னியை G.L.P. குணசேகர என்னுமொருவன், அக் கன்னிகையின் பெற்றோர் உற்றோர் காணாமற் கூட்டிக்கொண்டுபோய் விட்டானென, அவனுக்கு மாறாகக் கொழும்பு தெற்கு நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடரப்பட்டது; விசாரணையில் அவள் 20 வயசுப் பிராயமுடையவளெனவும், அவள் தான் நினைத்தபடி ஒருவனுடன் கூடிக்கொண்டு போகலாமெனவுங் கண்டு அவளும் அவனும் நிரபராதிகளெனக் காணப்பட்டனர்; நீதிபதியின் முன்னிலையிற் பெற்றோர் மகளைத் தங்களுடன் வீட்டிற்கு வரும்படி கேட்க, மகள் அவர்களுடன் போக மறுத்து, தான் குணசேகரவோடு போவதாகச் சொன்னாள்; அப்போது நீதிபதி திரு. J. N. S. திருச்செல்வம் அந்தப் பெண்ணைப்பார்த்து "நீங்களிருவரும் மணஞ்செய்து தம்பதிகளாக வாழ உத்தேசமா" என்று வினவ, லைலற் "ஓம், ஐயா" எனவும், நீதிபதி "எப்போது" என்று கேட்க, "இன்னும் ஒரு மாசத்திற்கிடையில்" என்று அவள் பதில் பகர்ந்தாள்; "அப்படியானால், கல்யாணஞ் செய்யும்வரையும் உன் பெற்றோர் வீட்டிற் போயிருப்பதே முறை" என்று மீளவும நீதிபதி சொல்ல, கன்னிகை மறுத்தாள்; அப்போது அவர் அவளை நோக்கி "உன் நன்மையை யுத்தேசித்துச் சொல்லும் என் புத்தியைக் கேளாவிட்டால், நீ பிறகு கண்ணீருங் கம்பலையுமாகத் தெருவிலலைந்து திரியவேண்டி நேரிடும்; வேணுமானால் இப்பொழுதே இருவரும் விவாகப்பதிவு செய்துகொண்டு புருஷன் மனைவியாய் வாழுங்கள்" என்று பரிந்து கூறினார்; கேட்டுக்கொண்டும் லைலற் தன காதலனுடனே கூடிக் கொண்டு போனாளாம்.

## விளையாட்டு வினையாய் முடிந்தமை

கான்பூரிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு குயவ வீட்டிலே ஒருதாய் பெற்ற மூன்று பிள்ளைகள், அயல் வீட்டுப் பிள்ளைகளோடு "ஒளித்து" விளையாடினார்கள்; விளையாடும்போது மூன்று சகோதரர்களும் ஒரு பெரிய மரப்பெட்டியுட் போய் ஒளித்திருந்தார்கள்; உள்ளிருக்கும்போது அந்தப் பெட்டியின் பெரிய மூடி, ஏதோ காரணத்தினால் வீழ்ந்து பெட்டி வாயை மூடிக் கொண்டது; பிள்ளைகள் விளையாடப் போய்விட்டார்களென் றெண்ணிக்கொண்டு தங்கள் கருமத்தைப் பார்த்துக்கொண்டு வீட்டிலிருந்த பெற்றோர், நீடித்த நேரம் மக்கள் மீண்டு வாராமையால் எங்குந் தேடியலைந்து ஈற்றிற் பெட்டியைத் திறந்து பார்த்தபோது மக்கள் மூவரும் ஒருவரை யொருவர் கட்டிப் பிடித்தபடி பிரேதமாகக் கிடக்கக் கண்டார்களாம்.

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கரஹ கார்த்திகைமீ எ௨ வெள்ளிக்கிழமை

## பாடப் புத்தகங்களைக் குறைக்க வித்தியாதிகாரி கொண்ட நோக்கம்

இலங்கை வித்தியாதிகாரியாகிய டக்டர் ஹொவ்ஸ், இக்காலத்திலே பிள்ளைகள் படிக்கும்படி வாங்கும் புத்தகங்கள் "கொப்பி"கள் மிக அதிகப்பட்டுவிட்டன எனவும், இதனாற் பெற்றார்களாக வுள்ளவர்கள் பிள்ளைகட்கு வேண்டிய புத்தகங்களையும் ஏனைய கல்விக்குரிய உபகரணங்களையும் வாங்கிக் கொடுப்பதற்குப் பணமில்லாமற் கஷ்டப்படுகிறார்களெனவும் உணர்ந்து, அடுத்த (52-ம்) ஆண்டு தொடக்கம், மாணவர்கள் படிக்கவேண்டிய புத்தகங்களைக் கட்டுப்படுத்த நோக்கங் கொண்டுவிட்டார்; தம் நோக்கத்தை வித்தியாசாலைகள் கல்லூரிகளின் தலைமையாசிரியர்கட்கும், அதிபர்கட்கும் சுற்றுநிருபம் அனுப்பி யுசாவியுள்ளாராம்.

ஆரம்ப வகுப்பிற் படிக்கும் பிள்ளைக்கு ஒரு புத்தகமும் வாங்கவேண்டியதில்லையாம்; அடுத்த முதல் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை படிக்கும் பிள்ளைகட்குப் பின்வருமாறு புத்தகங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன; 1 வாசக புத்தகம், 1 உபவாசக புத்தகம், 1 செய்யுட் புத்தகம்; ஐந்தாம் வகுப்பிற்கு வந்தபின் இவற்றோடு ஒரு உபபாஷை வாசக புத்தகமும் உபயோகிக்கலாம்; இலக்கணப் புத்தகம், வியாசமெழுதப் பயிலும் புத்தகம், பூமிசாஸ்திரம், குடியியல், சுகாதாரம், தேசசரித்திரம், இயற்கைப்பொருள்விளக்கம், வீட்டுத் தொழிற்பயிற்சி முதலியவற்றிற்காகிய புத்தகங்களைப் பிள்ளைகள் வாங்க வேண்டியதில்லையாம். அதிகம் "கொப்பி"ப் புத்தகங்களையும் வாங்கி உபயோகிக்க வேண்டாமாம். எழுத்துப் பயிற்சிக்காகிய அச்சுக் கொப்பிகளை வாங்கிப் பிள்ளைகள் நல்லெழுத்தெழுதப் பயில்வது ஆவசியகமாகும்; இனி, கணிதப் பகுதி விஞ்ஞான சாஸ்திர முதலிய பாடநூல்களில், ஐந்தாந்தரத்துக்கு மேற்பட்ட வகுப்புக்களில் ஒரே புத்தகத்தை உபயோகித்துக் கொள்ளலாகும்; மேலும், அற்லஸ் எனப்படும் தேசபடப்புத்தகம், அகராதி போன்ற புத்தகங்கள் விஷயத்தில் மேல்வகுப்புக்கள் எதற்கும் உபயோகிக்கக்கூடிய பூரணமான புத்தகங்களை ஒரே முறையில் வாங்கி வைத்துக்கொள்ளல் வேண்டுமாம்; இப்படியான புத்தகங்களையும் இன்றியமையாதன எனக் கண்டால் மாத்திரம் வாங்கி உபயோகிக்கலாமாம். அன்றியும், வித்தியாசாலை கல்லூரிகளிலுள்ள புத்தகசாலைகளில் உபாத்தியாயர்களுபயோகத்திற்கும் மாணவருபயோகத்திற்குந் தேவையான புத்தகங்களெல்லாம் இருத்தல் ஆவசியகமாம். டக்ரர் ஹௌஸின் புத்தகக் கட்டுப்பாட்டு விதிகள் இன்னுஞ் சிலவுண்டு; விரிவஞ்சி விடுத்தாம்.

டக்ரர் ஹௌவ்ஸ் கொண்ட நோக்கம் நல்லது; பிள்ளைகளைப்படிப்பிக்கவிரும்பிய பெற்றார் சுற்றத்தாரைக் கல்விச் செலவு விஷயமாக அதிகம் வருத்த வொண்ணாது, சிரமப்படுத்த வொண்ணாது, ஏழைப் பிள்ளைகளுங் கல்வியைப் பெற வேண்டுமென்ற சிறந்தசிந்தனையோடு கூடியது. ஆனால் இந்த நோக்கமுந் திருத்தமும் புதியனவல்ல; இற்றைக்கு முப்பத்தைந்து நாற்பது ஆண்டுகட்கு முந்தி இந்நாட்டிலே சுயமொழியையாக, ஆங்கிலத்தையாக, கற்றுவந்த பிள்ளைகள், குறித்த வித்தியாதிகாரி இப்பொழுது தெரிவிப்பதுபோல், ஒரு வாசக புத்தகம், ஒரு உபமொழி வாசக புத்தகம், ஏதும் ஒரு செய்யுட் புத்தகம், சகல பாடங்களுக்குமுரிய குறிப்பை யெழுதுவதற்காகிய ஒரேயொரு கொப்பிப் புத்தகம், "சிலேற்று" பென்சில் பேனா என்னு மிவைகளைத்தான் உபயோகிக்க வேண்டியிருந்தது; கணக்குப் புத்தகம், இலக்கணம், தேசபடம், அகராதி யென்னு மிவைகள் வித்தியாசாலையில் உபாத்தியாயர் வசம் இருந்தன; மேல்வகுப்பிற் பயின்ற பிள்ளைகள் மாத்திரம் மேலே சொல்லப்பட்ட புத்தகங்களோடு பூமிசாஸ்திரம் தேசசரித்திரம் முதலிய சில புத்தகங்களை வாங்கி உபயோகிக்க வேண்டிய நிலையிலிருந்தனர்; அக் காலத்திற் புத்தகங்களுங் கல்விக்காகிய ஏனைய உபகரணங்களும் மலிவாயிருந்தன; பள்ளிக்கூட வேதனமுங் கல்லூரிகளில் விடுதிச்சாலைக் கட்டணமுங் குறைவாயிருந்தன; ஏழைப் பிள்ளைகளும் ஒருவாறு கற்றுக் கடைத்தேறத் தக்கதாயிருந்தது. ஆனாற் காலகதியில் இலங்கை வித்தியா பகுதியாரின் புதிய நிபந்தனைகளாற் கல்விச் செலவு நான்கு ஐந்து மடங்கு அதிகப்பட்டு ஏழைப் பிள்ளைகள் மாத்திரமல்லர், செல்வர்கள் பெற்ற மக்களும் கல்வி கற்றல்கஷ்டமாய்விட்டது; இக் காலத்தில் ஊட்டப்படுங் கல்வி பேரளவில் இலவசக் கல்வியெனினும் உண்மையில், பள்ளிக்கூட வேதனம் விதிக்கப்பட்டிருந்த காலத்துள்ள செலவைக் காட்டிலும் அதிகமான செலவோடு கூடியதெனலாம். இப்படியான சந்தர்ப்பத்தில், இப்பொழுதுள்ள வித்தியாதிகாரி கல்விகற்குஞ்செலவை, விசேடமாகப் புத்தகம் முதலியன வாங்குஞ் செலவைக் கட்டுப்படுத்த நினைத்தமை பாராட்டத் தக்கதே; ஆனால் எங்கள் வித்தியாதிகாரி இன்னொருபாலார்க்கு நேரக்கூடிய பெரும் நஷ்டத்தை இந்த நேரத்தில் அறவேமறந்துவிட்டார்; அதனை நாம் அவருக்கு நினைப்பூட்டுகின்றோம்.

எங்கள் வித்தியாதிகாரி அடுத்த ஆண்டு தொட்டு, மாணவர் வாங்கி உபயோகிக்கவேண்டுவதில்லையெனக் கட்டுப்படுத்தும், கணிதம், பூமிசாஸ்திரம், தேசசரித்திரம், இலக்கணம், குடியியல்நூல், இயற்கைச்சீவனசாத்திரம் முதலான புத்தகங்களை ஆங்கிலத்திலும், தமிழிலும், சிங்களத்திலும் இந் நாட்டிலுள்ள ஆசிரியர்கள், புத்தகசாலைகள் வைத்து நடாத்துஞ் சமுதாயத்தார் பலர், அச்சிடுஞ் செலவு காகித விலை மிக அதிகமென்பதையும் பாராமற் பல்லாயிரக் கணக்காக அச்சிட்டு வைத்திருக்கின்றார்களே! அச்சிடுவித்து வருகிறார்களே! புத்தகக் கடைக்காரர்களும் இப்படியான புத்தகங்களை இங்கிலாந்து இந்தியா முதலிய நாடுகளிலிருந்து தருவித்தும், இங்கு வாங்கக்கூடிய புத்தகங்களை வாங்கியும் அடுத்துவரும் டிசெம்பர் மாச முதலாக விற்பதற்கு ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார்களே! புதிய வகுப்பிற்குரியபுத்தகங்களைப் பிள்ளைகள் வாங்குவதற்குச் சில வாரங்கள் மாத்திர மிருப்ப, புத்தாண்டு பிறத்தற்கு இடையில் ஒரு மாசந்தான் கிடப்ப, முன்னறிவித்தலின்றி, 1952-ம் ஆண்டு தொடக்கமாகக் கைக்கொள்ள வேண்டுமெனப் புதிய கட்டுப்பாடுகளை வித்தியாதிகாரி விதித்தால், பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான புத்தகங்களை எழுதியும் அச்சிட்டும் உதவும் ஆசிரியர்கள் சங்கங்கள் சபைகளின் கதி யென்னவாகும்? புத்தக வியாபாரிகளின் நிலைமை எப்படி முடியும்? இப்புத்தகங்களை யெல்லாம் அவர்கள் பழங்கடதாசி விலைக்கு நிறுத்து விற்பதா? இல்லையேற் சுட்டெரிப்பதா? "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் - எண்ணுவ மென்ப திழுக்கு"; இதைப்பற்றி வித்தியாதிகாரி சிந்தித்திலரெனினும், இலங்கை வித்தியாமந்திரி முதலான மேலதிகாரிகள் சிந்தித்தல்வேண்டும்; புதிய கட்டுப்பாட்டைச் சாதனையில்வைப்பதற்கு இடையில் இரண்டு வருடமேனும் வித்தியாதிகாரி தவணையிடல் வேண்டும்; அதாவது 1954-ம் ஆண்டு தொடக்கம் இக்கட்டுப்பாட்டைச் செய்யலாகுமே!

## உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 31)

"பருவத்தாலன்றிப்பழா"

அதிகாலையில் தனது இல்லத்தை யடைந்த கமலாட்சி அன்று பிற்பகல், வனசாட்சியின் இல்லத்திற்குச் சென்றாள்; வனசாவுந் தாயும் தலைவழக்கம்போல் அன்புடன் உபசரித்தனர்; "மகளே எங்கோ போயிருந்தாயாமே? போனஇடத்தில் ஏதும் விசேஷமுண்டோ" என்று வனசாவுடைய தாயார் கேட்க, "ஆம், ஆச்சி, எங்கள் அண்ணரிடந்தான போயிருந்தேன்; சுகமாயிருக்கிறார்; விவாக விஷயமாக அவருடன் பேசினேன்; இன்னுஞ் சிலகாலம் போகட்டும் என்று சொன்னார்; தீர்க்கமாக ஒன்றுஞ் சொல்லவில்லை" என்று நெட்டுயிர்ப்போடு சொன்னாள் கமலாட்சி. "ஆமாம், மகளே, உருவத்தால் நீண்ட உயர் மரங்களெல்லாம் - பருவத்தாலன்றிப் பழா; என்று நீங்கள் தாமே படிக்கிறீர்கள்; ஆங்காலந்தான் எதுவும ஆகும்" என்று சமாதானஞ் சொல்லிப் பெருமூச்சுவிட்டாள் வனசாவின் மாதா. இருவரும் இப்படிப் பேசும்போது பக்கலிலிருந்த வனசாட்சி கவலைகூர்ந்தாளுமல்லள்; மகிழ்ந்தாளுமல்லள்; "விநாயகப் பிரபு" என்று மெல்ல உச்சரித்துவிட்டுச் சும்மா விருந்தாள்; அவள் தாயைப் பணிவுடன் பார்த்து "அம்மா, தாகத்திற்கிருந்த அக்காவுக்கு ஏதுங் கொண்டுவந்து கொடுங்கள்" என்று சொல்ல, தாய் "உன் அக்காவுக்கு மாத்திரமல்ல உனக்கும் ஏதும கொண்டுவருகிறேன்" என்றுசொல்லிவிட்டு அடுக்களைப்பக்கம் போனாள் அதற்கிடையிற் கமலாட்சி வனசாவிற்கு அதி சமீபத்திற் போயிருந்து கொண்டு அன்புடன் பார்த்து "ஏன்? தங்காய், என்னுடன் அதிகம் பேசுகிறீரில்லை; ஏதும் மனஸ்தாபமோ" என்று இதமுற வினவினாள்; "ஒரு மனஸ்தாபமுமில்லை, அக்கா, ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? நான் மாத்திரமல்ல, உலகத்திலே உங்களோடு எவரேனும மனஸ்தாபப்பட முடியுமா? உங்கள் இதமான குணமும் நடையும் எல்லார்க்குங் கிடைப்பது அரிது" என்று உள்ளமுருகப் பன்னினாள் வனசா. மேலும் அவள் கமலாட்சியைப் பார்த்து "தாயாரோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தீர்கள்: அதனாற்றான் நான் இடையில் உங்களுடன் பேசவில்லை, அக்கா குறை யெண்ணாதீர்கள்" என்று கனிவுடன் சொன்னாள்.

"விநாயகன் விட்டவழி"

"ஏதோ பேசிக்கொண்டிருந்தீர்கள்" என்று வனசாட்சி அலட்சியமாகச் சொன்னதையிட்டு வெருவாகச் சிந்தித்துவிட்டு, கமலாட்சி பின்னரும் வனசாட்சியைப் பார்த்து "தங்காய், நான் அண்ணரிருக்குமூரிற் போய் மீண்டு இன்று காலைதான் வீடுவந்து சேர்ந்தேன்; இதனாற்றான உம்மிடம சில தினம நான் வரத் தவறினேன்" எனலும், "எல்லாரும் சுகமே யிருக்கிறார்களா" என்று வனசா வினவ, ஆம் என்றாள் கமலாட்சி; வனசாட்சி சற்று பேசாமலிருந்துவிட்டு, பின்னர்க் கமலாவை மகிழ்ச்சியுடன் பார்த்து "அக்கா, இல்லறத்துட் புகுந்தால், வாழ்க்கைத் துணைவியா யுள்ளவள அதனை இனிது நடத்த வேண்டும்; அந்த விஷயத்தில், முகமனல்ல, நீங்கள் சிறந்து விளங்குகிறீர்கள்; கொண்டான் குறிப்பறிவாள பெண்டாட்டி யென்று பெரியார் வாக்கியத்திற்குத்தக நடந்து வருகிறீர்கள்;

தொடர்ச்சி 8-ம் பக்கம்

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

சொல்லுகிறேனென்று குறையெண்ணுதீர்கள்; உங்கள் இல்லறம் இடையூறில்லாமல் இனிது நடைபெற வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தியுங்கள்; உங்கள் ஆன்மலாபத்தின் பொருட்டும் உழையுங்கள்" என்று முகத்திலே தேசஸ்விளங்கச் சொன்னாள்; "அப்படியே செய்கிறேன், தங்காய்" என்று கமலாட்சி சொல்லிவிட்டுச் சற்று நேரம் யோசித்தபின் வனசாவைப் பார்த்து "தங்காய், இல்லறமல்லது நல்லறமன்று என்பார்களே, ஆனால் உமக்கு இல்வாழ்க்கைப்படும் நோக்கம் இப்போது இல்லையோ" என்று வினவினாள்; "அக்கா, அன்பர்களுக்கு நேரும் விக்கினங்களை நீக்கி அருளபுரியும் விநாயகன் என்னை எந்த வழியிற் செலுத்தப் போகிறானோ, நான் அறியேன்; ஆனால் எனக்கு அந்த நோக்கம் இப்போது இல்லை அக்கா" என்று கூறினாள்; இப்படி வனசா சொல்லக்கேட்ட கமலாட்சி பெருங்கலக்கங் கொண்டாளாய், ஆனால் அக்கலக்கத்தை வனசா அயிர்க்காதபடி வேறு விஷயங்களையிட்டுச் சில நேரம் பேசிக்கொண்டிருந்து, தான் இரண்டொரு தினத்தில் மீண்டு அங்கு வருவதாகச் சொல்லி வனசாவிடத்தும் தாயிடத்தும் விடைபெற்றுக்கொண்டு தன்னில்லத்திற்கு மீண்டாள்.

(வரும)

## யாழ்ப்பாணம் ஆ.தி. பாஷாபிவிருத்திச்சங்கம்

இச்சங்கத்தின் 28-வது ஆண்டு நிறைவு விழாவும்; வருடாந்தக் கூட்டமும் டிசெம்பர் மாதம் 15, 16-ந் திகதி சனி, ஞாயிறு வாரங்களில் (15-12-51, 16-12-51), வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமெனவும், பழைய அங்கத்தவர்களும், அங்கத்தவர்களாய்ச் சேர விரும்புபவர்களும், டிசெம்பர் மாதம் 5-ந் திகதிக்கு முன் இவ்வருடச் சந்தாப் பணம் ரூபாய் ஐந்தையும் காரியதரிசிக்கு அனுப்பவேண்டுமெனவும், குறித்த திகதிக்குமுன் சந்தாப்பணம் கொடுக்கத் தவறினோர் அங்கத்தவரின உரிமைகளை இழப்பரெனவும் மேற்படி சங்கக்காரியதரிசி, திரு. அ. சரவணமுத்து தெரிவிக்க விரும்புகின்றார்.

## : வானவில் :

○ கலாமந்திரன் ○

● ரக்குவானைப் பட்டின சங்கக் கூட்டம் சென்ற வாரம் நடந்தபோது, சங்கத்தலைவரின் காலடிக் கணித்தாக 4 அடிவரை நீண்ட ஒரு பாம்பொன்று படமெடுத்து இரைக்கத் தொடங்கியது. தலைவரும் அங்கிருந்த ஏனையோரும் ஏங்கி அஞ்சி அசையுமுன்னர் பாம்பு மறைந்துவிட்டதாம்; அதன் பின் சபைத்தலைவர் நாற்காலியி லிருக்கும்போதும் காலை நிலத்திற்பட வைப்ப திலையாம்; குறித்த கூட்டம் நடந்த மண்டபம் பலபுற்றேடும் வெடிப்புக்களோடுங் கூடியதாம். இனிமேல் அப்பழைய கட்டடத்தைப் புதிப்பித்தன்றிக் கூட்டங்கூடுவதில்லையென விடுத்து வேறொரு கட்டடத்திற்கூட உத்தேசித்திருக்கிறார்களாம்.

● இப்பொழுது பிருத்தானிய பிரதமராயிருக்கும் மிஸ்ரர் உவின்ஸ்ரன் சேர்ஜிலின் மகனாகிய ருண்டொல்வ் என்பவர் தமது மோட்டாரதத்தைச் செலுத்திப்போகும்போது, தெருவில்நின்ற பொலிஸ் காட்டிய சைகையைப் பொருட்படுத்தாமற் செலுத்திச் சென்றதற்காக, நீதிதலத்தில் விளங்கி 1 பவுண் அபராதம் விதிக்கப்பெற்றாராம.

● புத்தர் பெருமானையும் சிவபெருமானையும் வணக்கும் சீவகாருண்யமுள்ள பௌத்த மக்களும் சைவ மக்களும் அதிகமாகக் குடியிருக்கும் இந்தச் சுயாதின இலங்கையில் இப்பொழுது மாட்டிறைச்சி வேட்கை மிகவும் அதிகப்பட்டுக்கொண்டது; சென்ற ஞாயிற்றுக்கிழமை ராகமவுக் கணித்தாகவுள்ள உவெலிஸாரா வைத்தியசாலை முன்றிலில் ஒரு பெரிய எருது மேய்ந்துகொண்டு நிற்கும்போது, அயலில் நின்ற ஒரு பெருமரத்தின் கொம்பர் முறிந்து அந்த எருதின் மேல்வீழ எருது அதனால் ஊறுண்டு வீழ்ந்து குற்றுயிராய்க்கிடந்தது. இப்படியான நிலைமையிலே எருது கிடந்து துடிப்பதைக்கண்டு அந்த எருதின் சொந்தக்காரனும், அக்கிராமவாசிகளும் ஒவ்வொரு கத்தியைக் கையிற் கொண்டுபோய் அந்த மாட்டினை வெட்டிவெட்டித் தங்களுக்குத் தேவையான இறைச்சியை எடுத்துக் கொண்டுபோக மாடு மாண்டு போயதம்!

● சுமாத்திராவிலுள்ள மின்னன்கபோ என்னுமூரிலே விவாகப் பதிவு நீக்கஞ் செய்யுங் கொள்ளும் முறை மிக இலகுவானதாம். கணவன் மனைவியிடம் போகும்போது, அவள் அடுத்தடுத்து மூன்று முறை அவனைக்கண்டவுடன் கதவைப் பூட்டிக்கொண்டால், கணவன் பின்னர் அங்கே போகவேண்டியதில்லையாம்; இருவருக்கு மிடையிலுள்ள கல்யாணப் பதிவு நீங்கிவிட்டதென்று கணவன் விளங்கிக்கொள்ளவேண்டுமாம.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (25-11-51—1-12-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இது சஞ்சலத்தோடு கூடிய வாரமாகும். செலவதிகப்படும்; உத்தியோக சங்கடமுண்டு; தேகசுகத்தைப் பேணுக; புதன் தொடக்கம் வெள்ளிக்கிழமை முடிய வெகு கஷ்டமாகும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்.

கிழமையின் கடைசிநாளொழிய எஞ்சிய நாட்கள் அனுகூலமானவை; புதிய கருமங்களைத் தொடங்கலாம்; காணி பூமியால் வருவாயுண்டு; குடும்பப் பிணக்கும் நேரக்கூடும்; சனிக்கிழமை சாவதானமாக நடந்துகொள்ளவும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

இவ்வாரத்தில் எதிரிகள் சோர்வறுவர்; ஆண்களாற் பெண்களுக்கும் பெண்களால் ஆண்களுக்கும் உதவியுண்டு; தூரித்த ஊரிலிருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்; மனமகிழ்ச்சியுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

இடையிடையே சுகயீனம் நேரக்கூடும்; ஆனாற் கருமஞ்செய்வதற்கு ஏற்ற காலம்; புதிய கருமங்களாற் காத்திருந்த பலன் கிடைக்கும்; வாரம் முடிவதற்கிடையில் சில பிரதான மாறுதல் ஏற்படக்கூடும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

குடும்பப்பிணக்குப் பெரிதுமுண்டாம்; எந்தக் கருமத்தையும் அவசரப்பட்டு நிச்சயிக்கவொண்ணாது; அந்தரங்க சத்துருக்கள் கோள் சொல்லுவோர் அலர்தூற்றுவோர் என்னும் இப்படிப்பட்டவர்களோடு அவதானமாக ஊடாடுக.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இவ்வாரத்தில் அதிக முயற்சியும் பெரும் மாறுதலும் உண்டு; நண்பரால் உதவியுமுண்டு; எதிரிகளை வெல்லலாம்; லாபமும் காரியசித்தியுமுண்டாம்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

இந்தக்கிழமை புதிய கருமங்களிற்றலையிட வொண்ணாது; கிழமை முடிவில் நன்மையான செய்தியுண்டு; ஆனால் அதன் பலன் காலகதியிற்றான் கைகூடும்; தேகசுகத்தை விசேஷமாகப் பேணுக.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

அற்ப சுகயீனமும், சிறிது மனச் சஞ்சலமும் நேருமெனினும் பொதுவில் நன்மையான வாரம்; பணவரவு, பார்க்கும் முயற்சியிற் சித்தியுண்டாம்; எடுத்த கருமங்களை ஊக்கத்துடன் செய்க; கோபத்தையடக்கவேண்டும்; மேலுத்தியோகத்தவருடன் விநயமாக ஊடாடுக.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இவ்வாரத்திற் பிரயாசையோடு உழைக்கவேண்டும்; புதியதாய் வரும் நண்பரை நம்பவொண்ணாது; எதிரிகள் கிழமை முடிவில் அந்தரங்கமான முறையில் இடையூறு செய்ய முயலக்கூடும்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

குடும்பத்திலுள்ள முதியோரால் சில சஞ்சலம் நேரலாம்; எதனையும் யோசியாமற் செய்யவொண்ணாது; பிரதான கருமங்களைச் செய்தற்குத் தவணையிடுக; கிழமை முடிவில் எதிர்பாராத முறையில அற்ப பிணக்கு நேரக்கூடும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3-ம் பாதம்

சொந்தக் கருமங்களில் அதிக சங்கடந் தரும் வாரம்; வாரத்தின் முதலிரு தினங்களிற் கோபம்மூள ஏதுவுண்டாம்; தேகசுகத்தைப் பேணுக; புதன்கிழமை தொடக்கம் சில நன்மையுண்டாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்பக் கருமங்களில் அவதானமாக நடந்துகொள்க; திங்கள் தொடக்கம் புதன்கிழமைவரை அவதானமாக ஊடாடுக; எஞ்சிய தினங்கள் புதிய கருமங்கள் செய்வதற்கு ஏற்றன; ஆனால் மெல்ல மெல்லச் செய்தல் வேண்டும்.


L K S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
| = O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.


## ஸ்ரீமதி வசந்தகோகிலத்தின் வித்தியாதானம்

3½ லட்சம் ரூபா

சிறந்த சங்கீத நிபுணையும், படக்காட்சி நடிகையுமாகிய ஸ்ரீமதி வசந்த கோகிலம், இற்றைக்கு இரண்டு வாரங்கட்குமுன் சடுதியில் நேர்ந்த நோய் காரணமாகத் தேகவியோகமாயினர்: இவர் இற்றைக்குச் சில வருடங்கட்கு முன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் "கார்னிவல்" கொண்டாட்டத்தின்போது இங்கு வந்து சங்கீதாமிர்தம் பொழிந்தமையை இங்குள்ளார் பலர் அறிவர்; இறக்கும்போது வயசு 31. இந்திய பெண்களின் கல்வி விருத்தியின் பொருட்டு வள்ளற்றன்மையுள்ள ஸ்ரீமதி வசந்தகோகிலம் 3½ லட்சம் ரூபா விநியோகஞ் செய்யும்படி தமது மரண சாதனத்திற் காட்டியுள்ளாராம்.


=ஏழாம் பாலபாடம்=

இப்பாலபாடம் இப்பொழுது அவதாரிகை பரீட்சைக்கு வினாக்கள் இலக்கண விளக்கம் வினாக்களென்னுமிவைகள் அநுபந்தமாகச் சேர்த்து வெளியிடப் படலாயிற்று.

விலை சதம் 90

மனேஜர்.



## தினவரவு இடாப்பு

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பலர் பிரேரித்தபடி எங்கள் தினசரி இடாப்புக்கள் உயர்ந்த காகிதத்திற் சிறந்த முறையில் அச்சிட்டு அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

விலை ஒன்றரை ரூபா.

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்.

# பிரகடனம்

**திருவாதவூரடிகள் புராணம்**
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

**பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)**
சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

**வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்**
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

**அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்**
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

**மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்**
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

**உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)**
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

**ஈழமண்டல சதகம்:**
ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் ... ... ரூ. 1·00

**சைவ சமயசாரம்:**
ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்று யுள்ளது. விலை சதம் 45

**"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)**
சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கில மறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணு 10)

**முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்**

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.


# ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி நவம்பர் 24**

காலை 7 10 ஸ்தோத்ரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 கே ராஜம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 ஆங்கிலப்பேச்சு 2 தமிழில்செய்தி 2 10 தமிழ்ப்பேச்சு 2 30 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 அப்துல் கனி விதார் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழிச் செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 எம் எல் வசந்தகுமாரி பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கவிச் சொல் வேளீர் 9 30 தாராபாத சக்கரவர்த்தி ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு நவ 25**

காலை 7 10 ஸ்தோத்ரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி சதம்பநிகழ்ச்சி 1 பணிமலர் 1 30 வாத்ய இசை * 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 எல் ஜி கிட்டப்பா * 2 தமிழில்செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசைநிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 5 45 அம்ருதவல்லி சுந்தரராஜன் பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 புதியவெளியீடுகள்* 7 45 ரேடியோ அறிமுகம் 8 தஞ்சாவூர் கே பாலகிருஷ்ணபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் நவ 26**

காலை 7 10 ஸ்தோத்ரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே வி நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 நீங்கள்கேட்டவை * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 பீன் * 2 தமிழில்செய்தி 2 10 புல்லாங்குழல் மண்டோலின் * 2 15 ஆங்கிலப்பேச்சு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமய்யர் வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 காளிதாஸர்கண்ட பெண்ணரசிகள் 8 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமய்யர் வயலின் 8 30 சமலா கிருஷ்ணமூர்த்தி * 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கே வி நடராஜன் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வா நவ. 27**

காலை 7 10 ஸ்தோத்ரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 டி என் கங்காபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 வீணை* 2 தமிழில்செய்தி 2 10 வாடியா பிலிம் வாத்யகோஷ்டி* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 வல்லம் வ கிருஷ்ணன் நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 டி என் கங்காபாய் பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 சாத்தூர் ஏ ஜி சுப்பிரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 வல்லம் வ கிருஷ்ணன் நாகஸ்வரம் 10 முடிவு.


# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
கால்றுத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

## சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமதுவிலாசம் நிர் 1 தட்டாதெரு
M 92 கோட்டைமுனை, மட்டக்களப்பு



| திறமான | திறமான |
|---|---|
| **தேக்க மரங்கள்** | **குணிமார்க் ஓடுகள்** |
| பல நீனிசுகளிலும் | 13½, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
Std 2 யாழ்ப்பாணம்



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எசசந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49 சிறப்பர்.


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, f Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarpannai, Jaffna, on Friday November, 23 1951